# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

### இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | கர்நாடக சங்கீதம் II<br>Carnatic Music II | நேரம் :-<br>3மணித்தியாலம் |
| சுட்டெண்:............................. | 42 T II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம |

- ❖ பகுதி II இன் வினா இலக்கம் **ஒன்று** கட்டாயமானது
- ❖ ஏனையவற்றில் இருந்து **நான்கு** வினாக்களைத் தெரிவு செய்க
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி II

(1)

1. ஏறுமயில் என்ற திருப்புகழ் அமைந்த தாளம் யாது ?
2. வர்ணத்தின் அங்கங்கள் எத்தனை ?
3. 72 மேளகர்த்தா சக்கரத்தில் சுத்த மத்திம சக்கரங்கள் எவ்வாறு அழைக்கப்படும் ?
4. மிஸ்ரசாபு தாளத்திற்குரிய ஜதிச்சொல் யாது ?
5. 25 – 30 வரையான இராகங்களைக் குறிக்கும் சக்கரம் யாது ?
6. காமவர்த்தனி என அழைக்கப்படும் இராகம் எது ?
7. வில் போட்டு வாசிக்கப்படும் வாத்தியம் யாது ?
8. “ குருகுஹ ” என்ற முத்திரையை உடையவர் யார் ?
9. ஹரிகாம்போஜி இராகத்திற்கு வழங்கப்படும் பண்களின் பெயர்கள் இரண்டு தருக ?
10. 72 மேளகர்த்தா சக்கரத்தில் 22, 57 ஆவது இராகங்களின் பெயர்களை முறையே தருக ?

( 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 2 + 2 = 12 புள்ளிகள் )

(2) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இலட்சணம் தருக

1. பந்துவராளி
2. மத்தியமாவதி
3. ஹரிகாம்போஜி

( மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானம், விசேட அம்சங்கள், சஞ்சாரம், உருப்படி என்பன குறிப்பிடப்பட வேண்டும் )

( 12 புள்ளிகள் )

(3) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

1. 16 ஸ்வரப்பெயர்கள்
2. சாபு தாளம்
3. க்ரஹம்

( 6 X 2 = 12 புள்ளிகள் )

(4) 1. கர்நாடக இசையில் பக்கவாத்தியமாக பயன்படுத்தப்படும் தாள வாத்தியம் எது ?

2. இவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிக்குக ?
3. இவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக ?
4. இவ் வாத்தியத்தின் சிறப்புக்களைத் தருக ?
5. இவ் வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் அடைந்தவர்களின் பெயரினைத் தருக ?

( 1 + 4 + 3 + 2 + 2 = 12 புள்ளிகள் )

(5) 1. முத்துஸ்வாமி தீஷிதர் வாழ்ந்த காலப்பகுதியைத் தருக ?

2. இவரது இளமைக் காலம், கல்வி பற்றிக் குறிப்பிடுக ?
3. இவர் இசைக்காற்றிய பணியினை விரிவாக குறிப்பிடுக ?
4. இவரது சிஷ்யர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக ?
5. இவர் ஆற்றிய அற்புதங்களையும், அச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பாடல்களையும் குறிப்பிடுக ?

( 1 + 2 + 4 + 1 + 4 = 12 புள்ளிகள் )

(6) 17 ஆம் 18 ஆம் நூற்றண்டின் கலாசாரப் பின்னணியை விபரித்து எழுதுக

( 12 புள்ளிகள் )

(7) நீர் கற்ற ஆதிதாள வர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியை இராக, தாள, ஆரோகண, அவரோகணம், இயற்றியவர் என்பவற்றைக் குறிப்பிட்டு ஸ்வர தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக

( 12 புள்ளிகள் )